*9*

# “கர்த்தர் அறிகின்றார்”

## (1:17-20)

*யோவான், “தேவவசனத்தினிமித்தமும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியினிமித்தமும்” பத்மு தீவில் இருந்தார் (1:9ஆ). அவர் இருந்த இடத்தில் நான் இருந்திருந்தால், நான் சலிப்படைந்திருப்பேன் - அங்கே இனியும் நான் பிரசங்கிக்க இயலாதிருந்தபடியால் சலிப்படைந்திருப்பேன், நான் எனது சக கிறிஸ்தவர்களுடன் இருக்க இயலாதிருந்தபடியால் சலிப்படைந்திருப்பேன், அவர்களின் துன்பங்களில் நான் அவர்களுக்கு ஆறுதல் கூற இயலாதிருந்தபடியால் சலிப்படைந்திருப்பேன். பின்பு, கர்த்தருடைய நாள் ஒன்றில், “சாராம்சமாக, ‘நீ (உன்) மக்களுடன் இருக்க இயலாது போயிருக்கலாம், ஆனால் நீ அவர்களுக்குச் செய்தியொன்றை அனுப்ப இயலும்; அது நான் உனக்குக் கொடுக்கப்போகின்ற செய்தியாக உள்ளது’ என்று கூறிய ஒரு குரலைக் கேட்டார்.”[1] அவர் பின்னோக்கித் திரும்பியபோது, “மனுஷகுமாரனுக்கொப்பானவரை” கண்டார் (1:13ஆ): அறுபது ஆண்டுகளுக்கு முன்பாகத் தமது நண்பராக மற்றும் துணைவராக இருந்த நாசரேத்தூர் இயேசுவே அவர், ஆனால் இப்போது அவர் தமது சகல மகிமையிலும் இருந்தார்!*

*நமது முந்திய பாடத்தில் நாம், யோவான் கண்ட இயேசுவின் தரிசனம் பற்றிய நமது படிப்பைத் தொடங்கினோம், இது அவருக்குத் தரப்பட விருந்த பல தரிசனங்களில் முதலாவது தரிசனமாக இருந்தது. இந்தத் தரிசனம், இயேசு வல்லமை அதிகாரம் நிறைந்தவராக உள்ளார் என்று போதிக்கிறதாகக் கருத்துத் தெரிவித்தோம், ஆனால் பின்பு அதை நாம், “இயேசுவானவர் அறிதலுக்கும் அந்த அறிவின் அடிப்படையில் செயல்படுவதற்கும் அதிகாரம் கொண்டுள்ளார்” என்று விரிவாக்கினோம். இந்தப் பாடத்தில், அறிதலுக்கான அதிகாரத்தை இயேசு கொண்டுள்ளார் என்ற கருத்தைக் கட்டியெழுப்ப நாம் விரும்புகின்றோம்.*

*கர்த்தர் அறிகின்ற ஒருவராகவே, வேதாகமம் முழுவதிலும் சித்தரிக்கப் பட்டுள்ளார். ஆபிரகாமைக் குறித்துத் தேவன், “(நான் அவனை) அறிந்திருக்கிறேன்” என்று கூறினார் (ஆதியாகமம் 18:19). தீர்க்கதரிசியான நாகூம், கர்த்தர் “தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்” என்று கூறினார் (நாகூம் 1:7ஆ). இயேசு, “நானே நல்ல மேய்ப்பன், ... நான் என்னுடையவைகளை அறிந்து ... இருக்கிறேன்” என்று கூறினார் (யோவான் 10:14, 15). கலாத்தியருக்குப் பவுல், “இப்பொழுதோ நீங்கள் தேவனை அறிந்திருக்க, அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க, ...” என்று கூறினார் (கலாத்தியர் 4:9அ). அவர் தீமோத்தேயுவுக்கு எழுதியபோது, “கர்த்தர்*

தம்முடையவர்களை அறிவாரென்பதும் ...” என்று கூறினார் (2 தீமோத்தேயு 2:19ஆ). அந்த வசனப்பகுதியில் இருந்தே இந்தப் பாடத்திற்கு “கர்த்தர் அறிகின்றார்'' என்பது தலைப்பாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

“அறிகின்றார்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது அடிக்கடி, உண்மைகளைப் பற்றிய வெறும் அறிந்துணர்தலைவிட அதிகமானவற்றை அர்த்தப் படுத்துகிறது. இது, “அறிகின்ற ஒரு நபருக்கும் அறியப்படுகிற பொருளுக்கும் இடையில் உள்ள உறவை அடிக்கடி சுட்டிக் காண்பிக்கிறது''; ''அறிகின்ற ஒருவருக்கு மதிப்புடையதாக அல்லது முக்கியமானதாக அறியப்பட்டுள்ள ஒன்று.''[2] அதிகாரம் 1ன் கடைசி வசனங்களை நாம் வாசிக்கையில், இயேசுவுக்கும் அவரது சீஷர்களுக்கும் இடையில் உள்ள உறவு ஒவ்வொரு வசனத்தில் இருந்தும் ஒளிவீசுவதாக இருக்கும்.

## நாம் எப்போது பயப்படுகின்றோம் என்பதைக் கர்த்தர் அறிகின்றார் (1:17)

இயேசுவின் மகிமையில் அவரை யோவான் கண்டபோது, அவர் “செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தார்” (வசனம் 17அ). அவர் பயத்தினால் செயலற்றவரானார். அவரிடத்தில் இயேசு, “பயப்படாதே” என்று கூறினார் (வசனம் 17இ). இயேசுவின் வார்த்தைகள், “தொடர்ந்து பயமுள்ளவனாக இராதே” என்று மொழிபெயர்க்கப்பட முடியும்.[3]

பயப்படாதிருக்கும்படிக் கர்த்தர் யோவானிடம் கூறியபோது, யோவானுக்குள் ஒரு நினைவு - இயேசுவுடனும் மற்ற இருவருடனும் ஒரு மலையுச்சிக்குச் சென்ற நினைவு - கிளர்ந்து எழுந்ததா? அந்த வேளையில், இயேசு மறுரூபம் அடைந்து மோசேயுடனும் எலியாவுடனும் இருந்ததை யோவான் கண்டிருந்தார். ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள்மீது நிழலிட்டது, மேகத்திலிருந்து ஒரு குரல், “இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்'' என்று கூறிற்று (மத்தேயு 17:5). யோவானும் மற்றவர்களும், “முகங்குப்புற விழுந்து, மிகவும் பயந்தார்கள்'' (வசனம் 6). பின்பு இயேசு, ''அவர்களைத்தொட்டு: எழுந்திருங்கள், பயப்படாதேயுங்கள்” என்றார் (வசனம் 7).

அந்தச் செய்தியைக் கர்த்தர் மனிதர்களுக்கு அடிக்கடி கொடுத்துள் ளார்.[4] சகரியாவிடத்தில் ஒரு தூதன், ''பயப்படாதே'' என்று கூறினார் (லூக்கா 1:13). இதே வார்த்தைகள் மரியாளுக்கும் (லூக்கா 1:30) யோசேப்புக்கும் (மத்தேயு 1:20) சொல்லப்பட்டன. மேய்ப்பர்களுக்குத் தூதர்கள் தோன்றிய போது, “பயப்படாதிருங்கள்” என்பது செய்தியின் ஒருபாகமாக இருந்தது (லூக்கா 2:10). யவீருவின் மகள் மரித்தபோது, அவரிடத்தில் இயேசு, “பயப்படாதே” என்று கூறினார் (மாற்கு 5:36). இதே வார்த்தைகளை இயேசு, தமது சீஷர்கள் புயலினால் அலைக்கழிக்கப் பட்டபோது, தாம் தண்ணீரில் நடந்து வந்தவேளையில் கூறினார் (மத்தேயு 14:27). கிறிஸ்துவைப் பின்பற்றுகின்றவர்கள் யாவருக்கும் அவர், ''என்

சிநேகிதராகிய உங்களுக்கு நான் சொல்லுகிறேன்: சரீரத்தைக் கொலைசெய்து, அதன்பின்பு அதிகமாக ஒன்றும் செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படாதிருங்கள்" என்று கூறினார் (லூக்கா 12:4). கொரிந்துவில் பவுலுக்குக் கர்த்தர் தரினமானபோது, "நீ பயப்படாமல் பேசு" என்பவைகளே அவரது முதல் வார்த்தைகளாய் இருந்தன (நடபடிகள் 18:9).

பயம் என்பது மனிதகுலத்தின் ஒரு பொதுவான நிலையாக உள்ளது. நம்மில் பலர், "நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது. நான் அஞ்சினது எனக்கு வந்தது'' என்று கூறிய (யோபு 3:25) யோபுவுடன் நம்மை அடையாளப்படுத்த இயலும். சிலர் எதிர்காலத்தைக் குறித்துப் பயப்படு கின்றனர். சிலர் நிகழ்காலத்தைக் குறித்துப் பயப்படுகின்றனர். சிலர், தங்கள் கடந்த காலத்தைக் குறித்து மக்கள் கண்டறிந்து விடுவார்களோ என்று பயப்படுகின்றனர். பலர் - வியாபாரத்தில், திருமணத்தில், வாழ்வில் - தோல்வியடைவதன் சாத்தியக்கூறைப் பற்றிப் பயப்படுகின்றனர். கிறிஸ்தவர்கள் - வேலையில், பள்ளியில், இல்லத்தில் - சோதனைகளில் பயப்படக்கூடும். கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுதலுக்குக் கூடப் பயப்படக்கூடும்.

நாம் பயத்தினால் மேற்கொள்ளப் பட்டவர்களாய் இருப்பதைத் தேவன் விரும்புவதில்லை. *Time* என்ற பத்திரிகை, பயத்தினால் இறந்து போன ஒரு மனிதர் பற்றிய வரலாற்றைச் செய்தியாக அறிவித்திருந்தது.[5] இந்த மனிதர் (மென்மயிருள்ள விலங்குகளை) வேட்டையாடும் தமது சாதனைப் பணிகளின் போது, உண்ணிப் பூச்சிகளால் பலமுறைகள் கடிபட்டிருந்தார். பின்பு அவர், உண்ணிப்பூச்சிகளால் பரப்பப்படும் லைம் என்ற வியாதியைப் பற்றிக் கேள்விப்பட்டார். அவர் தாம், வியாதியைப் பரப்பும் உண்ணிப்பூச்சியால் கடிக்கப்பட்டிருந்ததாகவும், தாம் அந்த வியாதியைத் தமது மனைவிக்குப் பரப்பியதாகவும் நினைத்துத் தளர்வுற்றார். அவருக்கு லைம் வியாதி இல்லை என்றும் அந்த வியாதியை யுடைய ஒருவர் அதை இன்னொருவருக்குப் பரப்புதல் என்பது உண்மையில் இயலாத செயல் என்றும் மருத்துவர்கள் அவரிடத்தில் உறுதிப்படுத்தினர், ஆனால் அவர்களை அவர் நம்பவில்லை. கடைசியில், அவரது நோய்ப்பயமானது அவர் தமது மனைவியைக் கொன்றுவிட்டு, தானும் தற்கொலை செய்துகொள்ளக் காரணமாயிற்று. பயம் என்பது பகுத்தறிவு வாய்ந்த சிந்தனையை அழிக்கக் கூடும்.

கர்த்தரிடத்தில் தாவீது, "நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்" என்று கூறியபோது (சங்கீதம் 56:3), தாவீது நமக்கு, பயத்திற்கான எதிர்மருந்தைக் கொடுத்தார். இடர்பாடுற்ற நமது ஆவியைப் பற்றித் தேவன் அறிந்திருக்கின்றார் என்பதை நாம் அறிவது அவசியமாக உள்ளது. யோவான் பயந்தபோது, இயேசு அதை அறிந்தார், மற்றும் நாம் பயப்படும்போது அதை(யும்) அவர் அறிகின்றார். அவர் அறிகின்றார் - மற்றும் அவர் பராமரிக்கின்றார்.

*எனது இருதயம் வேதனையுறும்போது,*
*சுமைகள் அழுத்தும்போது, அக்கறை துவளும்போது,*
*பாதை களைப்புள்ளதும் நீண்டதும் ஆகும்போது,*
*இயேசு அக்கறை கொள்கின்றாரா?*
*ஆம், அவர் அக்கறை கொள்ளுகின்றார்;*
*அவர் அக்கறை கொள்ளுகின்றார் என்று நான் அறிகின்றேன்,*
*எனது துன்பத்தினால் அவர் இருதயம் தொடப்படுகிறது; ...*
*நாட்கள் இளைப்புள்ளதாகும்போது,*
*நீண்ட இரவுகள் உயிரோட்டமற்றுப் போகும்போது,*
*எனது மீட்பர் பராமரிக்கின்றார் என்று நான் அறிகின்றேன்.*[6]

## நம்மை எப்படி ஆறுதல் படுத்துவது என்பதைக் கர்த்தர் அறிகின்றார் (1:17)

நாம் எப்போது பயத்தினால் அசைவற்று, உறுதியற்ற தன்மையினால் செயலற்று, வேதனையினால் வலிவிழந்து இருக்கின்றோம் என்பதை இயேசு அறிகின்றார் - மற்றும் நம்மை எப்படி *ஆறுதல்* படுத்துவது என்பதையும் அவர் அறிகின்றார். *"அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு (அல்லது பரீட்சிக் கப்படுகிறவர்களுக்கு) உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்"* (எபிரேயர் 2:18ஆ).

இயேசு, யோவானிடத்திற்கு அவரைப் பயமுறுத்துவதற்காக அல்ல, ஆனால் அவரை உற்சாகப் படுத்துவதற்காகவே வந்தார்; எனவே யோவானைப் பயப்படாதிருக்கும்படி அவர் (இயேசு) கூறினார். வார்த்தைகள் ஆத்துமாவை தேற்றக் கூடும். தீர்க்கதரிசி, *"நல்ல வார்த்தை களையும் ஆறுதலான வார்த்தைகளையும்"* பற்றிப் பேசினார் (சகரியா 1:13). இருப்பினும் இயேசு, வார்த்தைகளுடன் நிறுத்திக் கொள்ளவில்லை. புண்பட்டுள்ள ஒரு நண்பரின் தோள்மீது ஒருவர் கைகளைப் போடுவது போல், அவர் தமது கரத்தை யோவான்மீது வைத்தார் (வசனம் 17ஆ).[7]

இன்றைய நாட்களில் கர்த்தர் இன்னமும் நம்மை ஆறுதல் படுத்து கின்றார்: அவர் தமது வசனத்தின் வாக்குத்தத்தங்கள் மூலமாக நம்மை ஆறுதல் படுத்துகின்றார். சங்கீதக்காரர், *"அதுவே என் சிறுமையில் எனக்கு ஆறுதல், உம்முடைய வாக்கு என்னை உயிர்ப்பித்தது"* என்று கூறினார் (சங்கீதம் 119:50). வேதாகமம், ஆறுதல் மற்றும் பலப்படுத்துதல் ஆகியவற்றின் வார்த்தைகளால் நிறைந்துள்ளது.[8] பவுல், *"ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்"* என்று எழுதினார் (1 தெசலோனிக்கேயர் 4:18).

இன்றைய நாட்களிலும்கூட, கர்த்தர் வார்த்தைகளுடன் நிறுத்திக் கொள்ளாதிருக்கின்றார். அவர் தமது மக்கள் மூலமாக நமக்கு ஆறுதல் அளிக்கின்றார். பவுல் தாம், தீத்துவின் வருகையினால், *"சிறுமைப்பட்டவர் களுக்கு ஆறுதல் செய்கிற தேவன்"* மூலமாகத் தாம் ஆறுதல்படுத்தப் பட்டதாகக் கூறினார் (2 கொரிந்தியர் 7:6). அவர், *"... சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ... எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ள*

வர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங் களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர்" என்று கூறினார் (2 கொரிந்தியர் 1:3இ, 4).

மேலும், கர்த்தர் தமது அருளிரக்கமுள்ள பராமரிப்பின் மூலமாக நமக்கு ஆறுதல் அளிக்கின்றார். அவர், "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களாய்த்தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு எதுவாக நட(த்துகின்றார்)" (ரோமர் 8:28).

அவர் நம்மை ஆறுதல் படுத்தும் வழிகள் எல்லாவற்றிலும், அவரது பிரசன்னம் என்பது மிகவும் மதிப்புவாய்ந்த ஒன்றாக உள்ளது. தாவீது, "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர், உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்" என்று எழுதினார் (சங்கீதம் 23:4). தேவன், "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று வாக்குத்தத்தம் செய்துள்ளார் (எபிரேயர் 13:5ஆ).

நான்கு வயதுச் சிறுமியான மெலின்டா, "மூன்று பன்றிகளின் கதை" என்ற கதையை அதிகம் விரும்பினாள், ஒவ்வொரு இரவிலும் அதைத் தனக்கு வாசித்துக் காட்டும்படி தனது தந்தையை வற்புறுத்தினாள். திரும்பத்திரும்ப வாசிப்பதில் களைப்புற்ற அந்தத் தந்தை, கையில் எடுத்துச் செல்லக்கூடிய ஒலிப்பதிவுப் பெட்டியில் அந்தக் கதையைப் பதிவு செய்தார். அந்த ஒலிநாடாப் பெட்டியை எவ்வாறு இயக்குவது என்று அவர் தமது மகளுக்குச் சொல்லிக்கொடுத்தார், பின்பு அவர் "நீ இதை ஒவ்வொரு இரவிலும் கேட்கலாம்'' என்று அவளிடத்தில் கூறினார். ஒரு சில இரவுகளுக்குப் பின்பு அவர், தனது நாற்காலியின் அருகில் தனது மகள் தனக்குப் பிரியமான புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு தனது கண்களில் ஏக்கப் பேராவல் பொங்க நிற்பதைக் கண்டார். "மெலின்டா, இப்போது உனக்கு ஒலிப்பதிவுப் பெட்டியை இயக்கத் தெரியுமல்லவா?" என்று கேட்டார். அதற்கு அவள், "ஆம், ஆனால் நான் அந்தப் பெட்டியின் மடியில் உட்கார முடியாதே" என்றாள். நமது பிதாவானவர் ஆறுதலின் வார்த்தைகளை மாத்திரம் கொடுப்பவராய் இராமல், தமது பிரசன்னத்தையும் அருளுபவராய் இருக்கின்றார்.

## நாம் எவற்றைக் கேள்விப்படுதல் அவசியம் என்பதைக் கர்த்தர் அறிகின்றார் (1:17, 18)

யோவானிடத்தில் "பயப்படாதே" என்று கூறிய பின்பு இயேசு, அந்த அப்போஸ்தலரின் பயத்தை நீக்கிப்போடும் வார்த்தைகளைப் பேசினார். நீங்கள் அந்த வார்த்தைகளை வாசிப்பதற்கு முன்பு, உங்களை நீங்களே பின்வரும் கேள்விகளைக் கேட்டுக் கொள்ளுங்கள்: இயேசுவின் உதடுகளில் இருந்து எவற்றைக் கேட்கவேண்டியது யோவானுக்கு அவசியமாய் இருந்தது? ரோமப் படையானது எவ்வளவு பலம் வாய்ந்ததாக இருந்தது என்பதைப் பற்றி அவர் கேள்விப்பட வேண்டியது அவசியமாய் இருந்ததா? கிறிஸ்தவர்களின் மீதான துன்புறுத்துதல் குறைவதற்குப் பதிலாக எவ்வளவு மோசமாகும் என்பதைப் பற்றி அவர் கேள்விப்பட வேண்டியது

அவசியமாய் இருந்ததா? கிறிஸ்துவுக்குள்ளான அவரது சகோதரர்களும் சகோதரிகளும் எவ்வாறு தங்கள் உயிரை இழப்பார்கள் என்பது பற்றி அவர் கேள்விப்பட வேண்டியது அவசியமாய் இருந்ததா? இல்லை. அப்படிப் பட்ட விஷயங்களைப் பற்றி அவர் ஏற்கனவே அறிந்திராதவற்றை அவர் யூகிக்க முடிந்திருந்தது. எதிர்வந்து கொண்டிருந்த பயங்கரமான நாட்களைச் சந்திப்பதற்குக் கர்த்தர் அவர்களுக்கு உதவுவார் என்பதே அவர் கேள்விப் பட அவசியமானதாக இருந்தது. யோவானும் - மற்ற கிறிஸ்தவர்களும் - கேள்விப்பட அவசியமாய் இருந்த வார்த்தைகளைக் கவனியுங்கள்: "நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன், மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும்உயிரோடிருக்கிறேன், ஆமென், நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக் கிறேன்" (வசனங்கள் 17இ, 18).

ரோமர்களின் வலிமையினால் மேற்கொள்ளப் பட்டிருந்தவர்களுக்கு இயேசு, "நான் முந்தினவரும் பிந்தினவரும்,[9] உயிருள்ளவருமாயிருக் கிறேன்"[10] என்று கூறினார் (வசனங்கள் 17இ, 18அ). இந்த வார்த்தைகள் இயேசுவின் தெய்வீக இயல்பின் நினைவூட்டுதலாகப் பயன்பட்டன, ஆனால் இவைகள் அதைவிட அதிகமானவற்றையும் செய்தன. இவைகள், இயேசு ரோமப் பேரரசுக்கு முன்னதாகவே இருந்திருந்தவர் என்றும் அவர் ரோமப் பேரரசு இல்லாமல் போனபின்பும் இருப்பார் என்றும் கருத்துத் தெரிவிக்கின்றன![11] W. A. கிரிஸ்வெல் அவர்கள் பின்வருமாறு எழுதினார்.

> பூமியின் அரசர்கள் யாவரும் தரையின் புழுதியில் துயில்கொண்டு, அவர்கள் அதிகாரம் கடந்து சென்றபோது, பூமியின் நீடித்த நினைவுச் சின்னங்கள் யாவையும் காலைச் சூரியன் புறம்பே விரட்டும் பனிப்புகையாகத் திரும்பும்போது, பூமியின் மகாப்பெரியவர்கள் யாவரும் கல்லறையில் உறங்கும்போது, அவர் உயிருடன் நிலைத் திருந்து என்றென்றைக்கும் ஆளுபவராயிருப்பார்.[12]

இயேசுவோடு ஒப்பிடுகையில், ரோமப் பேரரசு என்பது, "கொஞ்சக் காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போல" இருந்தது (யாக்கோபு 4:14ஆ).

வேதசாட்சியாக மரித்தலை எதிர்கொண்டிருந்தவர்களுக்கு இயேசு, "மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென், நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்" என்று கூறினார் (வசனம் 18ஆ). "மரித்தேன்" என்பதில் உள்ள இறந்த கால வினைச்சொற்குறிப்பைத் தவறவிடாதீர்கள். அவர் மரித்தவராய் இருந்தார், ஆனால் இனியும் அவர் மரித்தவராய் இருப்பதில்லை; அதற்குப் பதிலாக, அவர் என்றென்றைக்கும் உயிருடன் இருக்கின்றார்! மேலும், அவர் இப்போது மரணத்தின் வட்டாரத்தின்மீது கட்டுப்பாடு செலுத்துகின்றார், ஏனெனில் அவர் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களைக் கொண்டிருக்கின்றார். மரணமும் பாதாளமும் ஒன்றாய் இணைந்திருக்கின்றன (6:8; 20:13, 14ஐக் கவனிக்கவும்); ஒரு நபரின் உடலானது மரிக்கும்போது, அவரது

ஆத்துமாவானது, காணப்படாத உலகத்திற்குச் செல்லுகிறது.[13] அவர் "மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களைக்" கொண்டிருக்கின்றார் என்று கூறியதில் இயேசு, விசுவாசத்திற்காக மரித்தவர்களின் ஆவிகளை விடுவிக்கத் தாம் அதிகாரம் கொண்டிருப்பதை வலியுறுத்தினார்.[14] அவர்களை மரணம் அழிக்காது, பாதாளம் அவர்களைப் பிடித்துவைத்திராது!

பெருந்துன்பத்தில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு இயேசுவால் பேசப்பட்ட அந்த வார்த்தைகள், இன்றைய நாட்களில் ஆறுதலை அளிக்கும் வகையில் நமக்கு அவசியமான தேவையாக உள்ளன. நம்மில் பெரும்பான்மை யானவர்கள், உலகத்தில் உள்ள தீமையைக் குறித்துக் கேள்விப்பட அவசியமற்றவர்களாய் இருக்கின்றோம். நம்மில் பெரும்பான்மை யானவர்கள், மிகவும் மோசமாகும் சூழ்நிலைகளைக் குறித்துக் கேள்விப்பட அவசியமற்றவர்களாய் இருக்கின்றோம். நமது கண்களைத் திறந்து வைத்துக்கொண்டிருந்தாலே நாம் அவற்றைப் பற்றி அறிய இயலும். வாழ்வில் கருத்தறிவைத் தேவனால் ஏற்படுத்த முடியும் மற்றும் எல்லாம் சரியாகும் என்பதே நாம் கேள்விப்பட அவசியமானவைகளாய் இருக்கின்றன.

இயேசு, "நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்" (வசனங்கள் 17இ, 18அ) என்று கூறுவதைக் கேட்பது நமக்கு இன்னமும் அவசியமானதாக உள்ளது. நம்மைச் சுற்றிலும் உள்ள குழப்பங்கள் தற்காலிகமானவையே, நாம் கிறிஸ்துவின் உதவியுடன் பிழைத்திருக்க முடியும் என்பதை அறிதல் நமக்கு அவசியமானதாக உள்ளது. ஜிம் மெக்கைகன் அவர்கள், "அவர் நடந்திராத எந்த சாலையிலும் நாம் நடக்க மாட்டோம். அவர் சந்தித்திராத அச்சம் எதையும் நாம் சந்திக்க மாட்டோம். அவர் ஏற்கனவே சாட்டைஅடி கொடுத்திராத எந்த விரோதியுடனும் நாம் போரிடமாட்டோம்!" என்று கூறினார்.[15]

கடைசியாக, நாம் "கடைசிச் சத்துரு"வினால் எதிர்கொள்ளப்பட்டிருக்கும்போது (1 கொரிந்தியர் 15:26), மரணத்தின் பேயுருவானது தனது அழகற்ற தலையை உயர்த்தும்போது, இயேசுவின் வார்த்தைகளைக் கேட்பது நமக்கு அவசியமானதாக உள்ளது: "மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங் களிலும் உயிரோடிருக்கிறேன்" (வசனம் 18ஆ). பர்ட்டன் காஃப்மன் என்பவர் ஒரு அடக்க ஆராதனையை நடத்தும்போது, கல்லறையின் அருகில் வெளிப்படுத்தின விசேஷம் 1:17, 18 வசனங்களை வாசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்:[16]

> நான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில்விழுந்தேன், அப்பொழுது அவர் தம்முடைய வலதுகரத்தை என்மேல்வைத்து, என்னை நோக்கி: "பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன், மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென், நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்."

நாம் எவற்றைக் கேள்விப்பட வேண்டியது அவசியம் என்பதைக் கர்த்தர் அறிகின்றார்!

## நாம் எவற்றை அறிவது அவசியம் என்பதைக் கர்த்தர் அறிகின்றார் (1:19)

அடுத்து இயேசு, வெளிப்படுத்தின விசேஷத்தைப் பதிவுசெய்வதற்கு யோவானுக்குக் கட்டளையை திரும்பக்கூறி விரிவாக்கினார்: ‘‘நீ கண்டவைகளையும், இருக்கிறவைகளையும், இவைகளுக்குப்பின்பு சம்பவிப்பவைகளையும் எழுது” (வசனம் 19).

இவ்வசனம் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை வரைக்குறிப் பிடுகிறது என்ற பல விளக்கவுரையாளர்கள் நம்புகின்றனர்: (1) ‘‘நீ கண்டவைகளையும்’’ என்பது, அதிகாரம் 1ல் யோவான் கண்டுகொண் டிருந்த தரிசனத்தைக் குறிப்பிடுகிறது; (2) “இருக்கிறவைகளையும்” என்பது, சபைகளைப் பற்றி அதிகாரங்கள் 2, 3 ஆகியவற்றில் பேசப்படுபவைகளைக் குறிப்பிடுகிறது; மற்றும் (3) ‘‘இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவை களையும்’’ என்பது அதிகாரம் 4 முதல் 20 வரை காண்பிக்கப்படுபவை களைக் குறிக்கிறது.[17] இவ்வசனம் இந்தப் (வெளி.) புத்தகத்தின் வரைக்குறிப் பாக இருக்கலாம்; ஆனால் இது அவ்வாறு இருந்தால், பல விதிவிலக்கு களைக் கொண்டுள்ளது. உதாரணமாக, அதிகாரங்கள் 4, 5ன் அரியணைக் காட்சிகள் என்பவை, இருந்திருந்த மற்றும் இருக்கவிருக்கிற இரண்டின் பாகமாகவும் உள்ளன. அத்துடன் கூடுதலாக, அதிகாரம் 12ல் சித்தரிக்கப் பட்டுள்ள இயேசுவின் பிறப்பு என்பது ஏற்கனவே நடந்திருந்த ஒன்றாக, எதிர்காலத்தில் நடக்க இராததாக உள்ளது.

‘‘இருக்கிறவைகள்’’ என்பவற்றை மாத்திரம் கண்ணோக்குவதால் விஷயங்களின் உண்மை நிலையை நாம் கூற இயலாது என்பதை நாம் அறிய வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார் என்ற வகையில் நான் இந்த வசனத்தைக் கண்ணோக்கவும் கருத்துத் தெரிவிக்கவும் விரும்புகின்றேன்; நாம் ‘‘இவைகளுக்குப்பின்பு சம்பவிப்பவைகளையும்’’ கண்ணோக்க வேண்டும். வெளிப்படுத்தின விசேஷம் அதைப்பற்றியதாகவே உள்ளது. இது, நமது சூழ்நிலை இப்போது எவ்வளவு மோசமானதாகக் காணப்பட் டாலும், ஒளிமயமான எதிர்காலம் நமக்குக் காத்திருக்கிறது என்று நமக்குக் கூறுகிறது! யோவானின் வாசகர்கள் அதை அறிய வேண்டியது அவசியமாயிருந்தது, நாமும் கூட அதை அறிய வேண்டியது அவசியமாக உள்ளது. “எதிர்காலத்திற்கான உறுதிப்பாடு உங்களுக்கு இருக்கும்போது, நீங்கள் நிகழ்காலத்தில் உறுதித்தன்மையைக் கொண்டிருக்கின்றீர்கள்.”[18]

“எழுது” (இது ஆங்கிலத்தில் ‘‘*Write* therefore ...’’ என்றுள்ளது) (வசனம் 19ஆ) என்ற வார்த்தைகளைக் கவனிக்கவும். முன்னதாக யோவானுக்கு, “நீ காண்கிறதை ஒரு *புஸ்தகத்தில் எழுதி*” என்று கூறப்பட்டிருந்தது (1:11ஆ) எந்தக் காலத்திலும் உள்ள இயேசுவின் சீஷர்கள் வாசித்து அகம் மகிழும்படி, உற்சாகமூட்டுதலின் வார்த்தைகள் ஒரு நிரந்தரமான வடிவத்தில் இடப்பட

வேண்டும் என்று கர்த்தர் விரும்பினார். G. K.செஸ்டெர்ட்டன் அவர்கள், "சந்தோஷம் என்பதே பரலோகத்தின் மும்முரமான பணியாக உள்ளது" என்று கூறினார்.[19] தேவனுக்கு நன்றி, நாம் எவற்றை அறிவது அவசியம் என்பதை அவர் அறிகின்றார் - அவர் அதை வெளிப்படுத்தின விசேஷம் என்ற புத்தகத்தில் பாதுகாத்துள்ளார்.

## நம்மை எவ்வாறு தாழ்மையாகக் காத்துக்கொள்வது என்பதைக் கர்த்தர் அறிகின்றார் (1:20)

நாம் முதல் தரிசனத்தை ஏறக்குறையப் படித்து முடித்துள்ளோம். இன்னும் ஒரு வசனமே எஞ்சியுள்ளது, இது கர்த்தரால் தரப்பட்ட விளக்கமாக உள்ளது: "என் வலதுகரத்தில் நீ கண்ட ஏழு நட்சத்திரங்களின் இரகசியத்தையும், ஏழு பொன் குத்துவிளக்குகளின் இரகசியத்தையும் எழுது, அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம், நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்" (வசனம் 20). இவ்வசனத்தை நாம் நமது முந்திய பாடத்தில் கண்ணோக்கினோம், ஆனால் மற்ற சில கருத்துக்களைக் கூடுதலாகத் தர நான் விரும்புகின்றேன்.

"இரகசியம்'' என்று மொழிபெயர்க்கப்பட்ட (கிரேக்க) வார்த்தை யானது "இரகசியமான" அல்லது "அறியமுடியாத" என்று அர்த்தப்படுவ தில்லை. மாறாக, அது புதிய ஏற்பாடு முழுவதிலும், கடந்த காலத்தில் அறியப்பட்டிராத (அல்லது புரியப்பட்டிராத) ஆனால் இப்போது வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒரு விஷயத்தைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது. (உதாரணத்திற்கு, மாற்கு 4:11; ரோமர் 16:25; 1 கொரிந்தியர் 15:51; எபேசியர் 3:3, 4 ஆகிய வசனங்களைக் காணவும்.) ஹோமர் ஹெய்லீ அவர்கள் பின்வரும் கவனக்குறிப்பை ஏற்படுத்தினார்:

> இவ்வார்த்தையானது ... மனிதரால் புரிந்துகொள்ளப்பட முடியாதது என்று மறைவாகக் கருத்து உணர்த்துவதில்லை, ஆனால் இது, அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் ஆகியோர் மூலமாகப் பரிசுத்த ஆவியானவரால் குறிப்புக் காட்டப்பட்டு அர்த்தம் வெளிப் படுத்தப்படும்போது மட்டுமே புரிந்துகொள்ளப்பட முடியும் என்பதைக் குறிக்கிறது. யோவானும் அவர் எழுதியதைப் பெற்றுக் கொண்டவர்களும் வேறுவகையில் அறிய இயலாத சில விஷயங் களைப் புரிந்துகொள்வதற்குக் குறிப்புக்காட்டப்பட வேண்டியவர் களாய் இருந்தனர்.[20]

வசனம் 20, வெளிப்படுத்தின விசேஷத்தை நாம் படிக்கையில் நம்மை நமது இடத்தில் வைக்கிறது. முந்திய பாடத்தில் நான், ''அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம்'' என்ற இயேசுவின் விளக்கத்துடன் போராடி, அந்த ஏழு நட்சத்திரங்கள் யார் அல்லது எது என்பதுபற்றி நாம் உறுதியாக அறிய இயலாது என்று முடிவுசெய்திருந்தேன். நீங்கள் வாழ்நாள் முழுவதும் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தைப் படித்தாலும், உங்கள் வாழ்வின் முடிவிலும் நீங்கள் இதைப் பற்றிக்

கேள்விகளைக் கொண்டிருப்பீர்கள். நாம் எவ்வளவு திறமைசாலிகளாக இருந்தாலும், தேவனைப் போல் அவ்வளவு திறமை கொண்டிருப்பதில்லை என்பதை நாம் அறிய வேண்டும் என்று தேவன் விரும்புவதாகக் காணப்படுகிறது! வெளிப்படுத்தின விசேஷம், ஏசாயா 55:9ல் உள்ள தேவனுடைய பின்வரும் வார்த்தைகளை முழுமையாக விவரிக்கிறது: "பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது."

வெளிப்படுத்தின விசேஷத்தைப் படிப்பது மற்றும் நாம் கற்றுக்கொள்வதற்குத் தேவன் அதில் கொடுத்துள்ளவற்றை அறிவது என்பதிலிருந்து எவரொருவரையும் மனந்தளரச் செய்வதற்கு நான் முயற்சி செய்யவில்லை. "தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்துநிற்கிறார்" (யாக்கோபு 4:6) என்று கூறுவதற்கு மட்டுமே நான் விரும்புகின்றேன், மற்றும் ஒருவேளை, வெளிப்படுத்தின விசேஷத்தின் சில வசனப்பகுதிகள் நாம் தாழ்மையுடன் நம்மைக் காத்துக்கொள்வதற்கு உதவலாம். நம்மைப் பற்றி நாமே அறிந்துள்ளவற்றிற்கும் மேலாகத் தேவன் நம்மைப் பற்றி அறிகின்றார்!

## முடிவுரை

மகிமைப்படுத்தப்பட்ட கர்த்தரின் தரிசனம் யோவானின் கண்களில் இருந்து விலகித் தேய்ந்தபோது, புறம்பாக ஒவ்வொன்றும் ஒரேமாதிரியாகவே இருந்தது. டொமீஷியன் இன்னமும் அரியணையில் வீற்றிருந்தார். முதிர்வயதான அப்போஸ்தலர் பத்மு தீவில் இன்னமும் தனிமைப்படுத்தப் பட்டிருந்தார், கிறிஸ்தவர்கள் இன்னமும் மரித்துக் கொண்டிருந்தனர் - ஆனால் இயேசு பேசியிருந்தார்! யோவானின் இருதயத்தில் என்ன ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும்! நிச்சயமாகவே, அவரது நம்பிக்கை மீண்டும் தூண்டிவிடப்பட்டிருந்தது, அவரது சந்தோஷம் புதுப்பிக்கப் பட்டிருந்தது, மற்றும் எதிர்காலம் பிரகாசமானதாகக் காணப்பட்டது! வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது, ஒடுக்கப்பட்டவர்களுக்காக, வாழ்வினால் மேற்கொள்ளப்பட்டிருந்தவர்களுக்காக, நம்பிக்கையை இழந்துபோனவர்களுக்காக எழுதப்பட்டது. இது, "மேன்மையான நாளையதினம் ஒன்றுள்ளது! இந்தச் சிந்தனையைப் பற்றிக்கொண்டிருங்கள், தேவனிடத்தில் நெருங்கித் தரித்திருங்கள்!" என்று கூறுகிறது. இந்தப் புத்தகம் உங்களுக்காக எழுதப்பட்டுள்ளது.[21]

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

இந்தப் பாடத்தையும் இதற்கு முன்புள்ள பாடத்தையும், "யோவான் அறிந்திருந்தவை யாவை" மற்றும் "இயேசு அறிகின்றவை யாவை" என்ற பிரதானக் கருத்துக்களைப் பயன்படுத்தி ஒன்றிணைக்க முடியும்.

குறிப்புகள்

[1]Ray Summers, *Worthy Is the Lamb* (Nashville: Broadman Press, 1951), 104. [2]W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III with James A. Swanson (Minneapolis, Minn.: Bethany House Publishers, 1984), 628. [3]*நிகழ்கால வினையில் உள்ள வினைச்சொல்லானது தொடர்ந்து செய்யப்படும் செயலைக் குறிப்பிடுகிறது.* [4]*புதிய ஏற்பாட்டின் இந்த உதாரணங்களுடன் கூடுதலாக, பயப்படாதே என்று கர்த்தர் மனிதர்களுக்குக் கூறிய பழைய ஏற்பாட்டு உதாரணங்கள் பல உள்ளன.* [5]"Fatal Overreaction," *Time* (14 August 1989): 33. [6]Frank E. Graeff, "Does Jesus Care?" *Songs of Faith and Praise,* ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishers, 1994). [7]*இயேசு யோவானைக் காலூன்றி நிற்கும்படித் தூக்கியும் இருக்கலாம்.* [8]*இந்தப் பாடத்தின் பிற்பகுதியில் அந்த வார்த்தைகளில் ஒருசிலவற்றை நாம் குறிப்பிடுவோம்.* [9]*"முந்தினவரும் பிந்தினவரும்" என்பது அடிப்படையில், "அல்பாவும் ஒமெகாவும்" என்றே அர்த்தப்படுகிறது (1:8; 22:13ஐக் காணவும்). பிதாவும் குமாரனும் ஆகிய இருவருமே "முந்தினவரும் பிந்தினவருமாக" எவ்வாறு இருக்கக் கூடும்? அவர்கள் பரிபூரணமாக ஒன்றாயிருப்பதால் இது சாத்தியமானதாக உள்ளது (யோவான் 10:30).* [10]*"உயிருள்ளவர்" (ஜீவனுள்ளவர்) என்பது தெய்வீகத்துவத்தின் குறிப்புப் பெயராக உள்ளது (யோசுவா 3:10; சங்கீதம் 42:2; 84:2; ஓசியா 1:10 ஆகிய வசனங்களைக் காணவும்).*

[11]*ஏசாயாவின் புத்தகத்தில், "முந்தினவரும் பிந்தினவரும்" என்ற சொற்றொடர், தேவன் தமது விரோதிகளைத் துரத்தி தமது மக்களை மீட்டார் என்ற கருத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது (ஏசாயா 41:4; 44:6; 48:12).* [12]W. A.Crisswell, *Expository Sermons on Revelation*, vol. 1 (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1962), 159. [13]*20:13ஐக் காணவும். "பாதாளம்" என்ற வார்த்தை "காணப்படாத" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது மற்றும் இது உருவமற்றுப்போன மரித்தவர்களின் "காணப்படாத உலகத்தைக்" குறிக்கிறது. இயேசு மரித்தபின்பு அவரது ஆவியானது காணப்படாத உலகத்தில் இருந்தது (நடபடிகள் 2:31). லூக்கா 16:19-31ல், காணப்படாத உலகம் பற்றிய மிகவும் புரிந்துகொள்ளக்கூடிய சித்தரிப்பு காணப்படுகிறது.* KJV *வேதாகமத்தில் வெளிப்படுத்தின விசேஷம் 1:18ல் (மற்றும் 6:8; 20:13, 14 ஆகியவற்றில்)* "Hades" *என்பதற்குப் பதில்* "hell" *என்று உள்ளது, இது* KJV *வேதாகமம் (துன்மார்க்கரின் நித்திய வாசஸ்தலமான) gehenna என்பதையும்* "hell" *என்றே மொழிபெயர்த்து இருப்பதினால் குழப்பம் உண்டாக்குவதாக உள்ளது.* Hades *என்பது துன்மார்க்கரின் நித்திய வாசஸ்தலமாக இருப்பதில்லை.* [14]*அவிசுவாசிகளை மரித்தோரின் வட்டாரங்களிலும் பாதாளத்திலும் தள்ளவும் இயேசு அதிகாரம் கொண்டுள்ளதாக அவரே கூறியுள்ளார் (இதை வெளிப்படுத்தின விசேஷத்தின் பிற்பகுதியில் நாம் காண்போம்) - ஆனால் இந்த வசனப்பகுதியில், கிறிஸ்தவர்களுக்கு உரிய பலன்கள் அடிப்படைக் கண்ணோட்டத்தில் இருப்பதாகக் காணப்படுகிறது.* [15]Jim McGuiggan, *The Book of Revelation,* Looking Into the Bible Series (Lubbock, Tex.: International Biblical Resources, 1976), 39. [16]Burton Coffman, *Commentary on Revelation* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1979), 34. He makes one change for such an occasion, using the phrase "death and the grave" from Phillips' translation (*The New Testament in Modern English*, ed. J. B. Phillips [New York: The Macmillan Co., 1958]). [17]*வசனம் 19, மும்மடங்குப் பிரிவு என்பதற்குப் பதிலாக இருமடங்குப் பிரிவைப் பற்றியும் பேசுவதாய் இருக்கக் கூடும். இது, "நீ இவை எல்லாவற்றையும் கண்ட பின்பு, (1) இருக்கின்றவற்றையும் (2) இனி இருக்கப்போகின்றவற்றையும் பற்றி எழுது" என்று அர்த்தப்பட முடியும்.* [18]Warren W. Wiersbe, *The Bible Exposition*

*Commentary*, vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 571. [19]Quoted in Earl F. Palmer, *1, 2, 3 John & Revelation,* The Communicator's Commentary Series, vol. 12 (Dallas: Word Publishing, 1982), 123. [20]Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979), 115.

[21]*இந்தப் பாடம் ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், வெளிப்படுத்தின விசேஷத்தின் ஆசீர்வாதங்கள் இயேசுவுடன் சரியான உறவு கொண்டுள்ளவர்களுக்கு (மாத்திரம்) உரியவை என்பது, பிரசங்கத்தைக் கேட்பவர்களுக்கு நினைவூட்டப்பட வேண்டும். சிலர் ஞானஸ்நானம் பெற்றிறாதிருந்தால், அதைப் பெற்றுக் கொள்ளும்படி ஊக்குவியுங்கள் (மாற்கு 16:16). கிறிஸ்தவர்களாயிருந்து உண்மை யற்றவர்களாகிப் போனவர்கள் இருந்தால், அவர்கள் மீளக்கட்டுவிக்கப்படும்படி ஊக்குவியுங்கள் (யாக்கோபு 5:16).*

---

## மறுகண்ணோட்டம் & கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *வேதாகமத்தில் "அறிதல்" என்ற வார்த்தை எப்போதாவது உறவு ஒன்றைச் சுட்டிக் காண்பிக்கிறதா? இது ஒரு மனிதனுக்கும் அவரது மனைவிக்கும் இடையில் உள்ள உறவினால் விவரிக்கப்பட முடியுமா? (ஆதி. 4:1ஐக் காணவும்.)*
2. *''பயப்படாதே'' என்று கர்த்தர் யாருக்கெல்லாம் கூறினார் என்பதற்கு வேதாகமத்தில் இருந்து பட்டியல் ஒன்றைத் தரவும். நீங்கள் எப்போதாவது பயப்பட்டிருக்கின்றீர்களா? இன்றைய நாட்களில் மனிதர்கள் எதைக்குறித்து மிகவும் பயப்படுகின்றனர் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?*
3. *பயத்திற்கு எதிர் மருந்து என்ன?*
4. *வேதாகமத்தில் உங்களுக்குப் பிரியமான "ஆறுதலின் வார்த்தை" எது?*
5. *நாம் ஒருவரை ஒருவர் ஆறுதல்படுத்திக்கொள்ளும் வழிகள் சிலவற்றைப் பட்டியல் இடவும்.*
6. *இடர்ப்பாட்டைக் குறித்துத் தேவன் என்ன செய்யமுடியும் (மற்றும் என்ன செய்வார்)? என்பதைக் கேள்விப்படுதலைக் காட்டிலும் உலகத்தில் உள்ள இடர்ப்பாடுகள் யாவற்றையும் குறித்துக் கேள்விப்படுதல் அவ்வளவு முக்கியமானதல்ல என்ற கூற்றை நீங்கள் ஒப்புக்கொள்கின்றீர்களா?*
7. *"பாதாளம்" என்றால் என்ன?*
8. *''மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்கள்'' என்ற சொற்றொடர் எதனை அர்த்தப் படுத்துகிறது?*
9. *கடைசியில் எல்லாம் சரியாகும் என்ற செய்தி உங்களுக்கு அவசியமாக உள்ளதா?*